மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

EA.2/2019

நி.மஎண்.19 /2019

மு.வ 99/2015

வாசா.2

தேதி:- 21.10.2021

பெயர் :- முத்துசாமி

1873ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10வது பிரிவின் படி 2021 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் தேதி 21 ஆம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் இப்போது கடை வைத்து வியாபாரம் செய்யவில்லை. எதிர்மனுதாரர் பாத்தரியபமுகைதீன் பள்ளிவாசல் அருகில் கடை வைத்திருந்தேன். எதிர் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட கடையில் நான் முன்பு வியாபாரம் செய்து வந்தேன் அந்த கடை எண் எனக்கு தற்சமயம் ஞாபகம் இல்லை. நான் எதிர்மனுதாரரிடம் வாடகை கொடுத்தால் ரசீது வாங்கியுள்ளேன் தற்போது வாங்கவில்லை. எந்த ஆண்டு வரை ரசீது வாங்கியுள்ளேன் என்றால் தெரியாது. கடைசியாக 2013ல் வாடகை நான் இருந்த கடைக்கு ரூ.1200/- என்றால் சரிதான். 2013 மார்ச் வரை தான் நான் வாடகை செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். 2017 ஏப்ரல் மாதம் கடையை காலி செய்து எதிர்மனுதாரரிடம் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல, 2019ல் தான் காலி செய்து கொடுத்தேன். நான் கடையை காலி செய்து கொடுப்பதற்கு முன்பாக கடையை காலி செய்ய கோரி எழுத்து பூர்வாக கொடுத்தார்களா என்றால் இல்லை. 2019 ஏப்ரலில் தான் கடையை காலி செய்து கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2019 ஏப்ரலுக்கு ஒரு மாதத்திற்கு முன்பு தான் என்னை காலி செய்ய சொன்னதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட கடையை காலி செய்து கொடுக்கும் போது

ரூ72,000/- வாடகை பாக்கி இருந்தது என்றால் சரிதான். ரூ.72,000/-த்தை இதுவரை நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் என்னிடம் வாடகை பாக்கி கேட்டார்களா என்றால் கேட்டார்கள் நான் தாரேன் என்று சொன்னேன். கடைசியாக எந்த மாதம் வாடகை பாக்கியை கேட்டார்கள் என்றால் கடையை காலி செய்த பின்னர் கேட்கவே இல்லை. ரூ.72,000/- பாக்கியை கொடுப்பதற்கு என்னிடம் எண்ணம் உள்ளதா என்றால் இல்லை. எதிர்மனுதாரருக்கு ரூ.72,000 வாடகை பாக்கி வைத்துள்ளேன் அதை எதிர்மனுதாரர் என்னிடம் கேட்டதால் எதிர் மனுதாரருக்கு எதிராக மனுதாரருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரருக்கு எதிராக எந்த மனுவும் எந்த நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2019 ஏப்ரல் மாதம் தான் கடையை நான் ஒப்படைத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.